


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் எல். ஏ . மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ ஆகியோர் உள்ளனர்.



ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை அமைச்சர்அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, நகரமன்றத் துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர் தர்மராஜன், நகர்மன்ற உறுப்பினர் கண்ணன், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து நாளை

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!



## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

### திட்டக்குடி சட்டமன்ற தொகுதி

| ஒன்றிய, நகர, பேரூர் | தலைமை | நடைபெறும் இடம் |
|---|---|---|
| மங்களூர் தெற்கு | பா. செங்குட்டுவன் (ஒன்றிய கழக செயலாளர்) | தேரடி வீதி, மங்களூர் |
| மங்களூர் வடக்கு | த.சின்னசாமி (ஒன்றிய கழக செயலாளர்) | பேருந்து நிறுத்தம், அடரி |
| மங்களூர் கிழக்கு | வீ.அமிர்தலிங்கம் (ஒன்றிய கழக செயலாளர்) | பேருந்து நிலையம், இராமநத்தம் |
| நல்லூர் தெற்கு | வி.ஜெயராமன் (ஒன்றிய கழக அவைத்தலைவர்) | பேருந்து நிறுத்தம், முருகன்குடி |
| திட்டக்குடி நகரம் | ப.பரமகுரு (நகர கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில், திட்டக்குடி |
| பெண்ணாடம் பேரூர் | ம. குமரவேல் (பேரூர் கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில், பெண்ணாடம் |

### விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி

| ஒன்றிய, நகர, பேரூர் | தலைமை | நடைபெறும் இடம் |
|---|---|---|
| விருத்தாசலம் நகரம் | க.தண்டபாணி (நகர கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில், விருத்தாசலம் |
| விருத்தாசலம் தெற்கு | தி.வேல்முருகன் (ஒன்றிய கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில் , கருவேப்பிலங்குறிச்சி |
| மங்கலம்பேட்டை பேரூர் | சி.பாலசுப்பிரமணியன் (பேரூர் கழக செயலாளர்) | கடைவீதி, மங்கலம்பேட்டை |
| விருத்தாசலம் வடக்கு | கனக. கோவிந்தசாமி (ஒன்றிய கழக செயலாளர்) | பேருந்து நிறுத்தம் கோமங்கலம் |
| நல்லூர் வடக்கு | பாவாடை. கோவிந்தசாமி (ஒன்றிய கழக செயலாளர்) | கூட்டுச்சாலை, வேப்பூர் |
| கம்மாபுரம் மேற்கு | ப.சுரேஷ் (ஒன்றிய கழக செயலாளர்) | பாலக்கொல்லை |
| கம்மாபுரம் கிழக்கு | N. ஆசைதம்பி (ஒன்றிய கழக செயலாளர்) | மத்திய கிடங்கு அருகில் நெய்வேலி |

### நெய்வேலி சட்டமன்ற தொகுதி

| ஒன்றிய, நகர, பேரூர் | தலைமை | நடைபெறும் இடம் |
|---|---|---|
| பண்ருட்டி தெற்கு | சபா. இராஜேந்திரன் MLA., (நெய்வேலி சட்டமன்ற தொகுதி). (ஒன்றிய கழக செயலாளர்) | காடாம்புலியூர் |
| குறிஞ்சிப்பாடி மேற்கு | அ.குணசேகரன் (ஒன்றிய கழக செயலாளர்) | இந்திரா நகர், நெய்வேலி |
| நெய்வேலி நகரம் | குருநாதன் (நகர கழக செயலாளர்) | காமராஜர் நகர், மெயின் பஜார், நெய்வேலி |

### பண்ருட்டி சட்டமன்ற தொகுதி

| ஒன்றிய, நகர, பேரூர் | தலைமை | நடைபெறும் இடம் |
|---|---|---|
| அண்ணாகிராமம் கிழக்கு | வி.கே.வெங்கட்ராமன் (ஒன்றிய கழக செயலாளர்) | சந்தை தோப்பு தபால் நிலையம் அருகில் மேல்பட்டாம்பாக்கம் |
| அண்ணாகிராமம் மேற்கு | K. இராமச்சந்திரன் (ஒன்றிய கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில் திருத்துறையூர் |
| பண்ருட்டி நகரம் | கே.இராஜேந்திரன் (நகர கழக செயலாளர்) | JKR பின்புறம் பேருந்து நிலையம், பண்ருட்டி |
| நெல்லிக்குப்பம் நகரம் | ப.மணிவண்ணன் (நகர கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில் நெல்லிக்குப்பம் |
| மேல்பட்டாம்பாக்கம் பேரூர் | வ.ஜெயமூர்த்தி (பேரூர் கழக செயலாளர்) | தபால் நிலையம் அருகில் மேல்பட்டாம்பாக்கம் |
| தொரப்பாடி பேரூர் | ஆர்.சுந்தரவடிவேல் (பேரூர் கழக செயலாளர்) | கடைவீதி, தொரப்பாடி |
| பண்ருட்டி வடக்கு | இரா. சந்தோஷ்குமார் (ஒன்றிய கழக செயலாளர்) | பேருந்து நிறுத்தம், அங்குசெட்டிப்பாளையம் |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் மாநில – நிர்வாகிகள் மாவட்ட செயலாளர்கள், வட்டாரத் தலைவர், ஒன்றிய , நகர, பேரூர், கிளை வார்டு தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் கழக மாவட்ட நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்,**
செயலாளர், கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# வேலூர் தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்து தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க.வையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க வேலூர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியினர் பங்கேற்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் என மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

| நாள் (ம) நேரம் | தலைமை | முன்னிலை | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 12.02.2026 மாலை 04.00 மணி | ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட செயலாளர் | மலர்விழிலோகநாதன், மு.பாபு, பி.வெங்கடேசன், கோ.குமரபாண்டியன், ஆர்.பெருமாள்ராஜா, தி.மு.ஜாகீர் உசேன். | பேருந்து நிலையம், அணைக்கட்டு., அணைக்கட்டு தொகுதி. |
| 12.02.2026 மாலை 04.00 மணி | ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் | தி.அ.முகமது சகி, சுஜாதாஆனந்தகுமார், சி.எல்.ஞானசேகரன், என்.கஜேந்திரன், ஆர்.பி.இ.சசிக்குமார், எம்.ஏ.கணேஷ்ஷங்கர், எஸ்.தயாள்ராஜ், வி.ஜி.கே.சுந்தரவிஜி, ஆர்.சத்தியமூர்த்தி, ஜி.பாலமுரளிகிருஷ்ணா, சி.எம்.தங்கதுரை , ஆர்.கே.ஐயப்பன், பி.முருகப்பெருமாள், தி.அ.முன்வர் பாஷா, பி.அருள்நாதன். | சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், வேலூர், வேலூர் தொகுதி. |
| 12.02.2026 மாலை 04.00 மணி | அமலுவிஜயன் எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் | ஜி.எஸ்.அரசு, எஸ்.சௌந்தர்ராஜன், கே.ரவி. | புதிய பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், குடியாத்தம்தொகுதி. |
| 12.02.2026 மாலை 04.00 மணி | எம்.பிரபாத்குமார் | ஆலியார் ஜுபேர் அஹமத், க. ராஜமார்த்தாண்டன். | நாலு கம்பம், பேர்ணாம்பட்டுநகரம், குடியாத்தம்தொகுதி.. |
| 12.02.2026 மாலை 04.00 மணி | க. ஜனார்த்தனன் | எம். டேவிட், எம்.டி. சீனிவாசன், | பங்களாமேடு பேர்ணாம்பட்டு, குடியாத்தம் தொகுதி |

இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள் முன்னாள் முன்னோடிகள், வட்ட,வார்டு,ஊர்கிளை நிர்வாகிகள் விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிபெற செய்வதோடு அல்லாமல் ஒட்டுமொத்த தமிழக மக்களின் ஒருமித்த கண்டன குரலாக ஓங்கி ஒலித்திட ஒன்றிணைவோம், வென்று கட்டுவோம் என சூளுரைத்து முழக்கம் எழுப்புவோம்.

**ஏ,பி,நந்தகுமார் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர்,
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

## எம்.ஏ.மனோஜ் பாண்டியன் சிறப்புரை!

# ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கீழப்பாவூரில் “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, பிப். 11 - நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசை கண்டித்து “தமிழ்நாடு தலை குனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் இன்று (11 .02.2026 - புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் டாக்டர்.கலைஞர் திடல் கீழப்பாவூரில் நடைபெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.



இதில் முன்னாள் எம்எல்.ஏ. மனோஜ் பாண்டியன் பங்கேற்று கண்டன உரையாற்றுகிறார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி”தமிழ்நாடு தலைகுனியாது”மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (11.02.2026 - புதன் கிழமை ) மாலை 6 மணி அளவில் டாக்டர்.கலைஞர் திடல் கீழப்பாவூரில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் பங்கேற்று உரையாற்றுகிறார்.

ஆகவே மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், ஊரக, உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கழகத் தொண்டர்கள்,தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.